ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து அதாவது 1967-68 லிருந்து 30—11—1974 வரையில் 6.98 லட்சம் ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டு 3.57 லட்சம் மக்கள் பயன் அடைந்துள்ளனர்.

Tamil Nadu Cement to Uttar Pradesh.

*Q. 107. THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether the Central Government have recently issued any direction to the State that a portion of the Cement produced in Tamil Nadu should be exported to Uttar Pradesh ; and

(b) if so, the details thereof ?

உத்தர பிரதேசத்திற்கு தமிழ்நாடு சிமெண்ட்

திரு. எம். சங்கரலிங்கம் ; மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) மத்திய அரசு அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து உற்பத்தியாகும் சிமெண்டின் ஒரு பகுதியை உத்தரப்பிரதேசத்திற்கு அனுப்ப வேண்டுமென்று தாக்கீது ஏதும் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில் அதுபற்றிய விபரம் யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் (மாண்புமிகு தொழில் அமைச்சர் சார்பில்) (அ) and (இ) ; நம் நாட்டில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சிமெண்டை எல்லா பிராந்தியங்களுக்கும் மத்திய அரசின் சிமெண்ட் கட்டுப்பாடு அதிகாரி காலாண்டு அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறார். தமிழ்நாட்டில் ஒரு சில சிமெண்ட் தொழிற்சாலைகளின் உற்பத்தியில் ஒரு பகுதியை 1974ஆம் ஆண்டில் உத்திரப்பிரதேசம் உள்ளிட்ட வடக்குப் பிராந்தியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக இந்த அரசுக்கு எந்தவிதமான தாக்கீதும் அனுப்பப்படவில்லை.

திரு எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டில், மற்ற வருஷங்களை விட கூடுதலாக உத்தரப்பிரதேசத்திற்கு சிமெண்ட் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவரவர்களே, மொத்தம் எவ்வளவு என்ற புள்ளிவிவரம் என்னிடமில்லை. நம்முடைய சிமெண்ட் தொழிற்சாலைகளிலிருந்து உத்தரப்பிரதேசத்திற்குச் தனிச்சலுகை போல, உடனடியாக சில அளவு சிமெண்ட் அனுப்ப வேண்டுமென்று ஆலைகளுக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது.